දුරකථන ) 011 2669192
தொலைபேசி ) 011 2698507
Telephone ) 011 2675449

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) MA/MS/B/04/2016
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 22.11.2016
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

சகல மாகாண சுகாதார செயலாளர்கள்,
சகல மாகாண/பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
சகல போதனா/பொது வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
சகல ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர்கள்,
சகல மாவட்ட வைத்தியசாலை மாவட்ட மருத்துவ அலுவலர்கள்,
சகல மத்திய அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் விசேட இயக்கப் பணிப்பாளர்கள்

**2013,2014,2015 மற்றும் 2016 வருடாந்த இடம் மாற்றக் கட்டளைகளின் பிரகாரம் விடுவித்தல்**

வருடாந்தம் சுகாதார அமைச்சில் அதிக காலத்தையும் மற்றும் சிரமத்தையும் விரயம் செய்து மருத்துவ அலுவலர்களின் வருடாந்த இடம் மாற்று பட்டியல் தயாரிக்கப்பட்டாலும் எந்த விதத்திலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமையினால் வைத்தியசாலைகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோன்றியுள்ளன என பல்வேறு முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனால் இடம் மாற்றம் மூலம் விடுவிப்பு பெறுவதற்காக இருக்கின்ற மருத்துவ அலுவலர்கள் உட்பட நிறுவனத் தலைவர்களும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 2016 ஆம் ஆண்டு வருடாந்த இடம் மாற்று பட்டியலைத் தயாரிக்கும் போது, இது வரை வெளியிடப்பட்ட இடம் மாற்று கட்டளைகளில் 20% தான் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

02. இடம் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது நிறுவனத் தலைவர்களின் கடமையாவதுடன், இது சம்பந்தமாக தகுந்த உள்ளக நடவடிக்கைகளை மேற்கொண்டு சேவை நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் இடம் மாற்று கட்டளைகளை விரைவாக நடைமுறைப்படுத்தும் படி கேட்டுக் கொள்கின்றேன். இந்த இடம்மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது உங்களது நிறுவனத்தில் பல்வேறு பிரிவுகளின் சேவைகளில் தற்காலிகமாக தடங்கள் ஏற்படினும், அவை இடம்மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு முடிவுறும் போது இல்லாமல் போய்விடலாம். இந்த இடம்மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது மற்ற வைத்தியசாலை பணிப்பாளர்கள் மற்றும் மாகாண/பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் ஆகியோருக்கிடையே ஆரோக்கியமான தொடர்புகளை மேற்கொண்டு அதன் மூலம் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளலாம்.

03. 2016 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சகல இடமாற்றங்களையும் நடைமுறைப்படுத்தி 2016 டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன் அறிக்கையை எனக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன். ஏதாவது பிரிவில் பிரச்சினைகள் ஏதும் இருப்பின் அது சம்பந்தமாக நியாயமான அறிக்கையை எனக்கு சமர்ப்பித்து மீண்டும் இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

04. இந்த கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு சகல நிறுவனத் தலைவர்களும் இணைந்து கொள்வதுடன், இதனை கவனத்திற் கொள்ளாத அலுவலர்களுக்கு எதிராக தாபனச் சட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

Anura Jayawickrama
Secretary
Ministry of Health Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

பிரதி:
1. கணக்காளர் - அறிந்து கொள்வதற்கு
2. செயலாளர், அரச சேவை ஆணைக்குழு - அறிந்து கொள்வதற்கு